உ

சிவமயம்



"குடம்பை தனித் தொழியப் புட்பறத்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

கோப்பாய் தெற்கு இருபாலை வாழ்

அமரர்

## செல்வி சுகுணா இரத்தினசிங்கம்

அவர்கள்

இறைபதம் அடைந்தமை குறித்துபாடிய

# நினைவு மலர்

1995-09-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பொன்னவன் தந்த பொதிகையை
மென்னவன் ஏந்தி இருகையால்
மன்னவனாகி மார் பணைத்து
கைவீசி கதிர்வீசி மலராகமுன்
விண்நோக்கி சென்ற சுகியே நீ
வைத்தாடும் பாதவடி யருகில்
படைக்கிறோம் மலருக்குள் நினைவை.

- பெற்றோர் -
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பூவுலகில்
19-01 1985

வானுலகில்
31-07-1995

# செல்வி சுகுணா இரத்தினசிங்கம்

அவர்கள்

## திதி வெண்பா

ஸ்ரீமான் யுவாண்டு ஆடித்திங்கள்
பூர்வபக்க நாகசதுர்த்தியில் – நீரார்
போற்ற எம் சுகுணா யம்மா
இறையடி சேர்ந்த திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி சுகுணா இரத்தினசிங்கம் (சுகி) வாழ்க்கை வரலாறு

கவிஞர் இருவை ஜீவமோகன்

## ஆசிரியப்பா

இதமான இசை யெழுந்த
இந்து சமுத்திர நீரிடையே
அசையோடு விளைந்த முத்துவின்
இசையாறா யாழ்ப்பாணத்து
வளமிகு தேசமாம் கோப்பாய்
அதன் தெற்கே இருபாலை ஊராம்
அதன் நடுவே தென்னையும் மாவும்
உப்பும் நெல்லும் கிழக்கே
வாழையும் பலாவும் மேற்கே
குளமும் பூவும் காற்றும் குவிந்திட
வாழையடி வாழையாகி வாழ்ந்த
வல்லிபுரம் முத்துப்பிள்ளை இணைவால்
கணுவிடை முத்துக்கள் ஆறு
காலத்தை பிறந்தனர் அன்று
இராசமணி உடன் தம்பித்துறை
அருமைத்துறை பவளம்மா தொடர
இரத்தினசிங்கம் செல்வராணி தோன்ற
தாமரைக் குளநீர் தளம்பாது
தானமீந்தும் தானும் வளர்ந்து
கடமையில் நிறைவு காண
கரங்களை உரிய நேரத்தில்
வல்லிபுரம் இணைத்து வைத்தார்
சோண்டாவில் வாழ் செல்லத்துரை
மனோன்மணி பெற்ற மல்லிகாராணி
புஸ்பராணியில் மல்லிகா மலரை
தேர்ந்தெடுத்த இரத்தின சிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் கனித்த மேடையேறி
கழுத்தில் மூன்று முடிச்சிட்டு
கரம்பற்றி காலம் கனிந்துவர
அகிலன் சுரேகா அருணன்
அமலன் உடன் சுகுணாவையும்
கண்ணும் மணியாய் கருத்தில்
காலத்தில் பெற்று வளர்த்தான்
கண்ணும் கருத்துமாய் ஐவரும்
காலத்தை யறிந்து சிறப் போடு எழில்மிகு
பூத்துகுழுங்கிய நெல்மணி போலென்றும்
கலகல வென ஆடல் பாடல்
கலைகளை யாவும் மேவி குடும்பம்
செய்யும் தொழிலை தெய்வ மாக்கி
தெய்வத்தையே என்றும் பக்தி யாக்கி
பக்தி நெறி சிறக்க தினமும் இரத்தினம்
ஆலயம் பாதிவிரதம் பாதியாக
ஆண்டு தோறும் அவன் வழிமேல்
காலையும் மாலையும் கனிவளமாக்க
சாலையும் வாழையும் கடந்து
இன்பம் பொங்க இனிமையாக
வாழ் நாள் ஒருநாள் வழுக்காறுபாய
சூரியன் திசை வழுக்கி உதித்த
திங்கட் கிழமை காலை புலர்ந்து
வெள்ளிகள் யாவும் ஓடி மறைந்தது
சிட்டுக் குருவிபோல சுகுணா பறப்பாள்
பட்டுருவ சொல்லால் யாவரையும் கவர்வாள்
கலையும் இசையும் மழைபோல் பொழிவாள்
அலையும் மலையும் அவளே ஆள்வாள்
கட்டும் உடலும் அழகே வடிவம்
இரத்தின சிங்கத்தின் உயிரேயுருவம்
மல்லிகா தேவியின் பாசத்தின் சிகரம்
அன்றும் வழமையில் வீடெங்கும்
என்றும் அறியாத மகிழ்ச்சி பொங்க
தோட்ட கிணற்றிலும் விளையாடி மகிழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகுனா மாவடி வைரவர் யடியில்
ஆடினாள் பாடினாள் பின் தாய்மடி
மோதினாள் கோதினாள் தலைமுடியை
ஓடினாள் சட்டை வாங்களன
அறைக்குள் உறங்கிய தந்தை உறங்க
தாயும் சகோதரனும் தேடினார் சுகியை
ஆடிமாதம் முப்பத் தொன்று திகதிநாட
கோடி புண்ணியம் பெற்று பெற்றசுகி
ஆடினாள் கிணற்று நீரினில்
தேடிய தாய் கதறி கலங்கிட
வாடினாள் தந்தை வந்தவர் ஏங்கினர்
காலன் செய்த கொடுமையோ சதியோ
காலம் கடந்து விண் சென்றாள்சுகி
ஞானம் பெற்ற சுகுனா இளமைதான்
பாதம் தொட்டு வணங்கஇறை சென்றாள்
சுகுனாவின் ஆத்மா சாந்தி யடைய
இறைவனை வேண்டி நிற்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

□

## புலம்பல் விருத்தம்

உறங்காத என் விழிகள் உறங்கி விழிக்க முன்
அறங்காவும் உன்விழிகள் உறங்கியதேனம்மா
ஐந்துவிரல் காட்டி; கண்மணியே
காரியம் பெறும் நாயகியே - இனி
ஆறுதல் பெற யாரிடம் செல்வேன் சுகியே

தந்தை

ஊர்செய்திகளை கோர்த்துவரும் மகளே
ஊரல்ல உலகே கலகலக்கும்
சொல்லி போகும் இடம் இருக்க – நீ
பள்ளிகொண்ட இடம் கிணறோயம்மா

தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம் பொழிய கைவீச விளையாட
இல்லம் பொழிய கதிர் வீசி நீயாட
உள்ளம் உன்னை ஏங்கி நாடுது
வெள்ளம் போல் கண்கள் ஆனதே சுகியே

அண்ணன்மார்கள்

துணைக்கு நீ உண்டென்று
துணிவோடு நான் இருக்க – உனக்கு
ஏதுகுறை கிடைத்ததென்று
எம்மை மறந்து சென்றாய்

அக்கா

சுகியேசுகியே என்று இனியாரை அழைப்போம்
சுதந்திரம் பறந்த உன்னை எங்குகாண்போம்
கண்ணுக்கு பணியிருந்தும் நீயின்றி பார்வையில்லை
மண்ணில் வாழப் பிறந்தும் மறந்ததேனம்மா

மாமன் மாமி

பற்றோடு பறந்தோடி அழைத்து
முற்றோடு முழுதாக பழகிபின்
காற்றோடு கனகாலம் வாழமறந்து
உற்றோடு உவரறுத்து சென்றாயே

மச்சாள், மச்சான்

சுகியேசுகியே என அழைக்க
புயலே நீஏன் பொறாமை கொண்டு
அயலே அறியாத நேரம்பார்த்து
அள்ளிச் சென்றாயோ

சித்தப்பா,சித்தி

கொழுந்து கருகிய செய்திகேட்டு
ஊரில் நாங்கள் கலங்கினோம்
அணைத்து நாங்கள் கதைகள்பேச
அன்புச் செல்வச்சுகி என்றுவருவாய்

அப்பம்மா குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் கடந்து சென்றோம்
கடல் தண்ணீர் நனையவில்லை
கடல் கடந்து வந்த உன்சேதி
கேட்டு கண்ணீரில் நனைகிறோம் அம்மா

பேத்தி, பேரன் (வெளிநாடு)

ஊரார் உன்னைப் போற்ற
பாரார் போற்ற காலம் வரும் – என்ற
கனவு கண்டு நாமிருக்க
சுகியே நிலைமாற்றி போன தெங்கேம்மா

மாமன் மாமி (வெளிநாடு)

ஓடிவிளையாட ஒரு நாள்வரும்
ஆடி பகிர்ந்தாடி உன்னுடன் மகிழ்வோம் – என்று
வரைந்த காவியம் சோகமாகி
வடித்த கண்ணீர் ஓடுதம்மா

மச்சான், மச்சாள்
பெரியம்மா சகோதரர்கள்
(வெளிநாடு)

அக்கா அக்கா என அடிக்கடி
அழைக்கும் எங்களுக்கு இனியாரை
அழைப்போம் சுகியக்கா சுகியக்கா
ஆடிவிளையாட எப்போது வருவாயக்கா

தம்பிமார்கள்

சுகுணா மாலை கட்டி மாவடி
வைரவருக்கு போடுவது யாரம்மா
சுற்றி சுற்றி ஓடி வரும் உன்னுருவம்
சுற்றுமுற்றும் காற்றில் சுழறுதம்மா

உற்றார்

கற்றாரும் கனிந்தாரும் பொருளாரும்
காலத்தின் கவலை செய்யாதீர் – பற்று
அறுத்து பாவம் கலைத்து இன்று
அன்புச் சுகுணா முத்தி பெற்றாள் காண்

இருவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

### திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர் விதிர்த்
துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்றும்
கைதான் நெகிழவிடே னுடையா
யென்னைக் கண்டு கொள்ளே.

### திருவிசைப்பா

தன தனற்றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்தமர சேகரனே
உனகழலிணை என்நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
    ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
    விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
    யானாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடி எம்
    மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதுதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானை முகப் பெருமாளே.

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களது அனுதாப அஞ்சலி

எமது கல்லூரியில் ஆண்டு 6. C யில் கற்றுக் கொண்டிருந்த மாணவி இரத்தின சிங்கம் சுகுணாவின் அகால மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த கவலை கொள்ளச் செய்தது. இரண்டு தவணை களுக்கு முன்பு தான் இக்கல்லூரியில் அந்தப்பிள்ளை காலடி வைத்திருந்தாலும் தனது இனிய அடக்கமான சுபாவத் தால் தனது ஆசிரியர்கள் சகமாணவர்கள் அனைவரினதும் அபிமானத்தைப் பெற்றிருந்தார். சுகுணா என்றபெயருக் கேற்ற சுபகுணங்கள் கொண்டிருந்தார் அவரின் கீழ்ப்படி வான தன்மையும் கற்றல் மற்றும் சகல செயற்பாடுகளிலும் அவள் காட்டிய ஆர்வமும் அவரின் ஈடுபாடும் ஆசிரியர் களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. தமது மூத்த சகோதரர் களைப் போன்று கல்லூரியின் நல்ல மாணாக்கருள் ஒரு வராக எதிர்காலத்தில் அமையக் கூடிய தன்மையை அவரி டம் நாம் அவதானித்திருந்தோம்.

நிரம்பிய கல்வியுடன் வளமான எதிர்காலத்தைப் பெற வேண்டிய இச் சிறுமியை எவரும் எதிர்பாராத வகையில் காலன் அழைத்துச் சென்றமை அவரின் குடும்பத்தவர்க்கு மட்டுமல்லாது எமது கல்லூரிக்கும் மிகமிக மனவருத்தமான நிகழ்வாகவே அமைந்து விட்டது. விதி என்ற ஒன்றை வெல்ல எவராலும் இயலாது என்பதை நாம் உணர்வோம் எனவே அந்தப் பிள்ளையின் ஆன்மா நற்கதியடையப் பிரார்த்திப் போம். அவரின் அகால மறைவால் துயருற்றிருக்கும் பெற் றார், சகோதரர் மற்றும் உறவினர் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து ஆறுதல் அடைய வேண்டுகின்றோம்.

த. முத்துக்குமாரசாமி (அதிபர்)
ஆசிரியர்கள்
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிறஸ் கல்விநிலையம்
இருபாலை
27-8-1995

இருபாலை எக்ஸ்பிறஸ் கல்விநிலைய அதிபர், ஆசிரியர் மாண வர்களது அனுதாப அஞ்சலி

எங்கள் நிறுவனத்தில் ஆண்டு 6'B' இல் கல்விகற்ற இரத்தினசிங்கம் கருணா அவர்களது திடீர் மறைவையிட்டு அதிர்ச்சியடைந்தோம். வாழை இளங்குருத்து வாழவேண் டிய வயதில் இச் சோகமுடிவை அடைந்தமை கேட்டு கலங் காத இதயங்களேயில்லை. குழந்தைகளை ரோஜாமலர்கள் என்பார்கள். இரக்கமற்ற காலனிடம் இதுவுமில்லாமல் மறைந்ததோ. எப்பவோ முடிந்த காரியம் என்பார்கள் ஞானிகள். ஆனால் அந்த வார்த்தைகள் கூட எம்மைச் சாந்திப்படுத்தாது.

சின்ன அடி மண் பதித்தாய் இனும் மறையவையே
சிரித்த முகவழகு எங்கள் வகுப்ப விட்டுப் போகலையே
எண் எழுத்து கற்ற கொப்பி நாங்கள் இன்னும் மூட லையே
எம்மை விட்டு வாசலிலே ஏன்கிடந்தாய் மான்குட்டி


கல்வியிலே தனித்துவமாகி விளங்கிய இந்த மாணவி யின் இழப்பு ஈடுசெய்ய முடியாதவொன்று. மகளின் பிரி வுத்துயரால் ஆற்றொணாக் கவலையில் மூழ்கியிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

எக்ஸ்பிறஸ் கல்விநிலையம்
27-8-1995

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி தோன்றல்


வல்லிபுரம் + முத்துப்பிள்ளை
செல்லத்துரை + மனோன்மணி
தம்பித்துரை
அமரர் அருமைத்துரை
பவளம்மா
இரத்தினசிங்கம்
அமரர் செல்வராணி
மல்லிகாராணி
புஸ்பராணி
அகிலன்
கஜிரகா
அருணன்
அமலன்
சுகுணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நீங்காத துயர் சூழ்ந்து
கரையாக கறை படிந்தவுடன்
ஓடிவந்து எம்மை யணைத்து
நாடி ஆறுதல் கூறிய வர்கட்கும்
அயராது எம்முடன் நின்றும்
மலர்வளை யங்கள் சாத்தியும்
மலரஞ்சலி செலுத்தியும் துன்பக்
கவலையில் தூங்கா மணிவிளக்காய்
பங்கேற்று நின்ற வருக்கும்
இரங்கற் செய்தி யனுப்பியவர்க்கும்
இன்றைய வைபவத்தில் கலந்த
இன்கிதமான நண்பர்கள் உறவினர்கட்கும்
எமதுமன மார்ந்த நன்றி பல

— சுபம் —

குளுகண்டி லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

இங்ஙனம்
பெற்றோர்
சகோதரர்கள்

திருவள்ளுவர் அச்சகம் 593 நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org